**Starting time 12.5 8P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 117/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 04.04.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: இதே வழக்கு பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு எண். 41/2017 வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால், என் தாத்தா காலத்திலிருந்து எங்களுக்கு சொந்தமாக இருக்கும் 1 ஏக் நிலத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்டு தான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால், தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை சாட்சியிடம் காட்டி அதில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால், விளம்புகை பரிகாரம் தான் கோரினோம் என்று கூறுகிறார்.

2. அசல் வழக்கு எண். 41/2017-ன் வழக்குரை நகலான வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானவையா என்றால், ஆமாம். வா.சா.ஆ.1-ல் 21.07.1965-தேதியிட்ட கிரயப்பத்திரம் படியும், 31.03.1984 தேதியிட்ட கிரயப்பத்திரப்படியும் அசல் வழக்கு எண். 41/2017 சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால், ஆமாம். அந்த வழக்கிலேயே 331/3-ல் 1 ஏக்.78 செண்ட்டில் மேற்கில் 1 ஏக். உரிமை ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டது என கூறியுள்ளேனா என்றால், ஆமாம். சாட்சி பின்னிட்டு அனுபவத்தின் மூலம் பாத்தியப்பட்டதாக அந்த வழக்கில் கூறியிருப்பதாக கூறுகிறார்.

3. அந்த வழக்கிலேயே புல வரைபடம் தயார் செய்த போது எங்களுக்கு உரிமையான 1 ஏக். நிலத்தையும் சேர்த்து அளவையர் தவறாக புல வரைபடம் தயார் செய்துவிட்டதாக கூறியுள்ளேனா என்றால், ஆமாம். தவறாக சேர்த்துவிட்டார்கள். புல எண். 331/3 ல் மேற்கில் 1 ஏக். நிலம் எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், 1, 2 பிரதிவாதிகளுக்கு அதில் உரிமை

பாத்தியதை அனுபவம் எதுவும் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால், ஆமாம். இந்த வழக்கு சொத்திற்காக வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், 334-க்கான புல வரைபடம், அ பதிவேடு, புல எண். 334/7-க்கு வருவாய் துறை ஆவணங்களில் அரசு தரிசு புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ளது.

4. தாவா சொத்திற்கான கணினி அடங்கலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.4-ல் புல எண். 334/3 நல்லமுத்து உடையார் பெயரில் தவறாக சேர்த்துவிட்டார்கள். நல்லமுத்து உடையார் தான் 1-ஆம் பிரதிவாதியின் தகப்பனார் என்றால், ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் புல எண். 334/3-க்கான கணினி பதிவிறக்க நகல் என்றால், ஆமாம். ஆனால் மருதமுத்து பெயரில் தவறாக சேர்த்துவிட்டார்கள்.

5. தவறாக சேர்த்தது சம்மந்தமாக வருவாய் துறையினரிடம் மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால், RDO விடம் கொடுத்துள்ளேன். அந்த மேல்முறையீட்டு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தில் 1 ஏக் 76 செண்டடில் 1 ஏக்கர் புல எண். 334/3-ல் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால், காட்டவில்லை, அனுபவம் எங்களிடம் தான் உள்ளது. புல எண். 334/3-க்கான வருவாய் ஆவணமோ, உரிமை ஆவணமோ எங்களிடம் இல்லை என்றால், ஆமாம், ஆனால் அனுபவம் எங்களிடம் தான் உள்ளது.

6. புல எண். 334/3-ஐ எவ்வித இடையூறும் இன்றி 50 வருடமாக அனுபவித்து வருவது சம்மந்தமாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், கொடுக்கவில்லை. அசல் வழக்கு எண். 41/2017-ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று நாங்கள் பயிர் செய்திருந்ததை காட்டியுள்ளேன். அந்த ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நில அளவையர் வரைபடத்தை என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி தவறாக போட்டுள்ளதாக ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள் என்றால், இருப்பதை தான் அளவையர் போட்டுள்ளார்.

7. புல எண் 334/3-ல் உள்ள 1 ஏக். 76 செண்ட் நிலம் முழுவதும 1-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல, அதில் 1 ஏக்கர் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. 76 செண்ட் நிலம் மட்டும் தான் 1-ஆம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது. நான் மேற்படி சங்கதியை பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. புல எண். 334/3-ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. அனுபவ உரிமை இருக்கிறது. புல எண். 334/3-ல் என்னுடைய அனுபவத்தில்

இருக்கும் நிலத்தை பிரதிவாதிகளிடம் சுவாதீனம் ஒப்படைக்கவேண்டி ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் 48/2024-ஐ தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், ஆமாம்.

8. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1, 2 பிரதிவாதிகளின் கையெழுத்தோ, கைரேகையோ இல்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2-ல் கண்டுள்ள சொத்தற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால், சரியல்ல. 02.05.2019 தேதியன்று 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் கல் கொட்டி மறித்தார்கள் என்பது சம்மந்தமாக DSP இடம் கொடுத்ததாக கூறும் புகாரின் நகலை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், கொடுத்துள்ளேன். அதுபோல எந்த ஒரு புகார் மனுவையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

9. 02.05.2019 தேதியன்று நான் கூறுவது போல எந்த வித சம்பவமும் நடக்கவில்லை என்பதால் தான் அந்த புகாரின் நகலை என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால், சரியல்ல. கல் கொட்டி மறித்ததால் தான் புகார் செய்தேன். 02.05.2019 தேதியன்று மறித்ததால் தான் வழக்கிற்கு வழக்கு மூலம் ஏற்பட்டதாக நான் கூறியுள்ளதே தவறு என்றாலும், இவ்வழக்கிற்கு வழக்கு மூலமே எழவில்லை என்றாலும், சரியல்ல. புல எண். 336-ல் புறம்போக்கு நிலடத்தை 1, 2 பிரதிவாதிகள் அனுபவித்து வருவதை நான் தடுத்ததால் என்னுடைய பாதையை தடுத்ததாக நான் வழக்கிறக்காக பொய்யான கூறுகிறேன் என்றால், சரியல்ல.

10. என்னுடைய பாதையை அவர்கள் மறித்ததால் தான் அவர்கள் சட்டவிரோதமாக அனுபவம் செய்வதை நான் தடுத்தேன். வா.சா.ஆ.2-ன் மூலமாகத்தான் நான் பாதைக்கு உரிமை கோருகிறேன் என்றால், இல்லை. இல்லை என்று சாட்சி முதிலில் கூறிவிட்டு புல எண். 334/7-ல் அரசு தரிசு புறம்போக்கு நிலத்தின் வழியாக எங்கள் நிலத்துக்கு செல்லும் பாதை இருப்பதாலும் உரிமை கோருகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.28 P.M

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.